**பனை அபிவிருத்தி சபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பனை அபிவிருத்தி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ

செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 23.7 மில்லியன் சொத்துக்கள் சபையால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்ததுடன் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 - இன் படி தவறை சீர்செய்து மதிப்பிடப்படவில்லை. | பின்வரும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்புத் திணைக்களத்திற்கு சபை ஏற்கனவே வழங்கியுள்ளது.<br>லொறி - 02<br>இந்தியன் பிக்கப் - 04<br>பஜிரொ – 01<br>பழம் சார் உற்பத்தி நிலைய இயந்திரங்கள். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பில் நியாயமான மதிப்பீடுகளை பயன்டுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 03 வாகனங்களை விற்பனை செய்ததிலிருந்து பெறப்பட்ட காசு ரூபா 563,500 காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 03 வாகனங்களின் விற்பனை வருமானம் யூலை மாதம் 2018(01-07-2018) இல் ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பின்வருமாறு ஏனைய வருமானத்தில் இருந்தது. பி/23 760988, பி/23 760989 மற்றும் பி/23 760990. 01 யூலை 2018 இல் உள்ளடக்கியிருந்த மொத்த ஏனைய வருமானமாக ரூபா 631,646 ஆக இருக்கிறது. | முதலீட்டு நடவடிக்கையின் காசு பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தெளிவாக இணங்கியிருக்கவேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 முதல் 6 ஆண்டுகளாக 10 கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 4,759,319 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சபையால் 12 கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவை மீதி ரூபா 5,316,695 க்கான உறுதிப்படுத்தம் ஆவணங்கள் பெற்றிருக்கவில்லை. | • கால ஒழுங்கில் அனுப்பப்பட்ட கடிதங்கள்.<br>• சட்ட ஆலோசணையின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• மேலதிக நடவடிக்கைக்காக சட்ட ஆலோகசரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன்களை உரிய நேரத்தில் அறவீடு செய்வதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள்** | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி 110 | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடுகள் சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடுகள் சபையினால் பேணப்படுவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. | நிதி ஒழுங்கு விதிக்கு இணங்கவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி ஒழுங்குவிதி 272(இ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மாதாந்தம் அனுப்பப்படவேண்டிய போதிலும் அவை தொடர்புபட்ட மாதத்தின் இறுதியிலிருந்து ஆறு கிழமைகளிற்கு பிந்தாமல் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சபை ஏனைய மாவட்டங்களிலிருந்து ஒப்புகை பெறுவதில் தாமதத்தை எதிர்கொள்ளுகின்றது. எவ்வாறாயினும் இக் குறைபாட்டை தவிர்ப்பதற்கு முகாமை தேவையான நடவடிக்கை எடுத்திருந்ததுடன் எதிர்காலத்தில் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிதி ஒழுங்கு விதிக்கு இணங்கவேண்டும். |
| (iii) | நிதி ஒழுங்கு விதி 751(அ) | பெறுவனவுகள் வழங்கல்கள் மற்றும் முன்கொண்டுவரப்பட்ட மீதி என்பவற்றை தெளிவாக காட்டும் வகையில் இருப்புப்பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.<br>களஞ்சியத்தில் உள்ள இருப்புக்களின் பராமரிப்பு மற்றும் இருப்பு புத்தகங்களில் உள்ள கொள்வனவு பதிவுகளில் பல குறைபாடுகள் உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | இருப்புக்கள் மற்றும் இருப்பு புத்தக பராமரிப்பு மற்றும் கொள்வனவுகளின் பதிவுகளில் குறைபாடுகள் உள்ளமை முகாமையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த குறைபாடுகளை தீர்ப்பதற்காக சபை உள்ளக கணக்காய்வு முறைமையினை பலப்படுத்தி சம்பந்தப்பட்ட அலுவலருக்கு பயிற்சி திட்டங்களை அமுல்படுத்தியிருக்கின்றது. | நிதி ஒழுங்கு விதிக்கு இணங்கவேண்டும். |
| (iv) | நிதி ஒழுங்கு விதி 757(1)(,), (2)(m) ,(M) | • வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முன்னைய ஆண்டுகளிற்கான இருப்பு | நிதி ஒழுங்கு விதிக்கு இணங்கவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • முன்னைய ஆண்டுகளிற்கான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கியுள்ள பரிந்துரைகள் சபையினால் முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை | மெய்மையாய்வு பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. | |
| **(ஆ)** | **2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | | | |
| (i) | 4.2.2 ஆம் பந்தி | பௌதீகரீதியான மற்றும் நிதிரீதியான செயற்திறன் அறிக்கை, மாதத்திற்கான செயற்பாட்டு அறிக்கை, மாதத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மூலப்பொருள் பெறுமதியினுடைய கடன் பெறுகை மற்றும் பணப்புழக்க நிலை, மாதத்தில் குறிப்பாக கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் புதிய சேர்ப்பு, பதவியணி நிலை உள்ளடக்கிய மனித வளக் கூற்று போன்றன தேவைப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கிணங்க மாதாந்த சபைக்கூட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்திருக்கவில்லை. | முகாமையால் சபைக்கூட்டத்திற்கு மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலிற்கு இணங்கவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 4.2.5 ஆம் பந்தி | சபையானது அதன் தொழிற்படு மூலதனத்தின் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்திற்காக முறைமைகளை சபை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | மாதாந்த சபைக்கூட்டத்தில் இயக்குனர் சபையின் மீளாய்வுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை முகாமையால் எடுக்கப்பட்டிருக்கின்றது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலிற்கு இணங்கவேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 98,799,862 பற்றாக்குறையுடன் இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 131,952,115 பற்றாக்குறை ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 33,152,253 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மற்றும் பயிற்சி செலவினம் என்பவற்றின் வீழ்ச்சியே ரூபா 39,705,819 முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 மாதிரிப் பண்ணைகள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கிவந்திருக்கின்றது. கடந்த 04 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பு ரூபா 3 மில்லியனிலிருந்து ரூபா 1.2 மில்லியனாக இருந்தது. மேலும் மொத்தம் 128 ஏக்கர் நிலப்பரப்புடனான 04 மாதிரிப்பண்ணைகளின் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேய்மானம் மற்றும் காவலாளியின் செலவு காரணமாக பண்ணைக்கு நட்டம் ஏற்பட்டது. எப்படியிருந்தும் முகாமையினால் புதிய விவசாய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. | முறைமையினை மேம்படுத்துவதற்கு பொருத்தமான தந்திரோபாயங்கள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 03 உணவு பொருட்களான ஒடியல், உலர் ஒடியல் மற்றும் பனாட்டு என்பவற்றை பாதுகாப்பாக சேமிக்க பொருத்தமான வசதிகளில் உள்ள குறைபாட்டினால் ரூபா 584,000 பெறுமதியான பொருட்கள் அழிக்கப்பட்டிருந்தது. | உண்மையான நட்டமாக ரூபா 584,000 இருக்கின்றதுடன் மேலே உள்ள நட்டம் தொடர்பாக விசாரனைகள் இன்றுவரைக்கும் இடம்பெறுகின்றது. விசாரனை குழுவின் தீர்மானத்தின் படி முகாமை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து அறவீடு செய்யும். | நட்டத்தை குறைப்பதற்கு பொருத்தமான முறைமையினன அமுல்படத்தவேண்டும். |

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பனை விதைகள் நடுகைக்காக வன பாதுகாப்புத் திணைக்களம், 21 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 744,800 செலுத்தப்பட்டியிருந்தும் அந்த நிறுவனங்களால் நடுகை செயற்பாடுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. | நாங்கள் திசெம்பர் மாதத்தில் நிதி விடுவித்திருந்தோம். எனவே பிரதேச செயலகம் சரியான நேரத்தில் செயற்படுத்த முடியவில்லை. எதிர் காலத்தில் சரியான நேரத்தில் நிதியை விடுவிப்பதற்கு முகாமை கருத்தில் கொள்ளவேண்டும். | சரியான நேரத்தில் நிதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத நிதி

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திக்கம் வடிசாலையினை புனரமைப்பு செய்வதற்காக அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு, 2017 ஆம் ஆண்டு மற்றும் 2018 இல் ஆண்டுகள் முறையே ரூபா 112.5 மில்லியன், ரூபா 150 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியன் பாதீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டவற்றை சபையினால் பயன்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 23 நேரடி வேலை வாய்ப்புக்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட கலால் வரி மற்றும் சாராய உற்பத்தி மீதான ரூபா 119 மில்லியன் ஏனைய வரி வருவாய்கள் நாட்டினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் சாராய உற்பத்திச் செயற்பாடுகள் இல்லாததன் காரணமாக ஒர நாளைக்கு கிட்டத்தட்ட 30,000 லீட்டர் வீணாக்கப்படுவதுடன் சபைக்கு பனை சார் உற்பத்தி வழங்கல் இழக்கப்பட்டதனாலும் பனை சார் தங்கி வாழும் 15,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. | அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

---

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 நவம்பர் 2016 இல் சபையினால் ரூபா 2,914,560 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் இன்று வரைக்கும் எந்த செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் மேலும் 03 ஆண்டுகளுக்க மேலாக பயன்பாடற்றும் இருந்தது. | பனை அபிவிருத்தி சபையினால் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள உற்பத்தி பிரிவில் செயற்பாட்டு செயல் விளக்கம் செய்துகாட்டப்பட்டிருந்தது. வேலணை சங்கத்தில் பனங்களி பதப்படுத்தலுக்கான கட்டிட உட்கட்டமைப்பு சமீபத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு பனங்களி பதப்படுத்தலை வினைத்திறனுடன் செய்வற்கு நீர் சுத்திகரப்பு இயந்திரம் தேவை ஏற்பட்டதால் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வேலணை சங்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. | குறித்த நோக்கத்திற்கு இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 20,862,150 பெறுமதியான 03 எண்ணிக்கையான வெல்லம் பதப்படுத்தும் இயந்திரங்கள் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நிர்மாணிப்பதற்கு சபை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும் அந்த | 2018 ஆம் ஆண்டின் பருவகாலத்தின் இறுதி பகுதிக்கு பின்னரே 03 வெல்லம் பதப்படுத்தும் இயந்திரங்களும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது மன்னார் மற்றும் திருகோணமலைகளில் வெல்லம் பதப்படுத்தும் இயந்திரங்கள் செயற்படுகின்றது. ஆனால் காரைநகர் உற்பத்தி நிலையம் திருத்தவேலை | குறித்த நோக்கத்திற்கு இயந்திரத்தை பயன்படுத்தவேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள் எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் தேய்மான பெறுமதி ரூபா 4,172,430 தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. | |

## 3.6 தாமதமான மூலதன வேலை அல்லது திட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைதடியில் 02 மாடி பனை பாடசாலை கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2018 செப்ரெம்பரில் சபையால் ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மேலும் கட்டுமான வேலைகள் 2019 மார்ச் 12 இல் கட்டிமுடிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது எனினும் இந்த அறிக்கை திகதி வரைக்கும் அந்த நோக்கத்திற்காக 33 சதவீதங்கள் அல்லது 8.25 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | விரைவில் மதிப்படப்பட்ட செலவிலும் மற்றும் மேலும் காலதாமதமின்றி கட்டுமான வேலைகளை துரிதப்படுத்துவதற்கு முகாமையானது கட்டிட திணைக்களத்திற்கு கண்டிப்பாக தெரிவித்திருந்தது. | கட்டமான வேலைகள் காலதாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.7 தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினுடைய உள்ளக கணக்காய்வாளர் எந்தவொரு அனுமதியுமின்றி ஒரு சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராக ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் வேலை செய்திருந்தார். மேலும் சபையின் நிரந்தர வேலைக்கான சம்பளத்திற்கு மேலதிகமாக ஊவா வெல்லச | (அ) மற்றும் (ஆ) க்காக மேலதிக நடவடிக்கைக்காக ஆரம்பகட்ட விசாரணை உத்தியோத்தரை ஏற்கனவே யாழ்ப்பான மாவட்ட செயலகம் நியமித்திருந்தது. இவ் விடயம் தொடர்பாக சுதந்திமான விசாரணைகளை முகாமைக்கு வரிசை அமைச்சு | விடயத்தினை முடிவுறுத்துவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகத்திலிருந்தும் மொத்தமாக ரூபா 600,000 ஒரு சம்பளத்தினை பெற்றிருந்தார். | அறிவுறுத்தியிருந்தது. | |
| (ஆ) மேலும் சபையினுடைய உள்ளக கணக்காய்வளரால் மோசடியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது இது வெளிப்படுத்துகின்றது.மேலும் ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தினுடைய சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராக அவர் கடமையாற்றிக்கொண்டிருந்த போது குறித்த காலப்பகுதியில் சபையிடமிருந்து போக்குவரத்து படிகளாக கிட்டத்தட்ட ரூபா 72,000 பெற்றிருந்தார் | | |
| (இ) சபையினுடைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் அனுமதிக்கு மேலாக 08 முகாமையாளருக்கு சம்பள ஆண்டேற்றம் மொத்தமாக ரூபா 4,280,600 செலுத்தப்பட்டிருந்தது. | (இ) மற்றும் (ஈ) க்காக சம்பந்தப்பட்ட முகாமையாளரிடமிருந்து மீள அறவீடு செய்வதற்கு அமைச்சின் விசாரணைக் குழு பரிந்துறை செய்தது. எனினும் முகாமையாளர்கள் அமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடு செய்தார்கள் மேலும் முறைப்பாடு செயல் முறை இடம்பெறுகின்றது. | கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ஈ) மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு திட்டம் அனுமதித்த பின்னரும் சபையினால் ஆண்டேற்றத்தின் மேலதிக கொடுப்பனவு வழங்கியதன் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட 08 | | |

முகாமையாளருக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்காக மொத்தமாக ரூபா 627,577 தவறாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 இல் பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் வழிகாட்டி விதிமுறையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறுகைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2006 ஜனவரி 25 திகதி 08ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராணை சுற்று நிருபத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கும் பெறுகை நடவடிகக்கைகள் பட்டியல்படுத்தப்படவேண்டும். மேலும் பெறுகை நிறுவனத்தினால் பிரதான திட்டம் தயாரிக்கப்படவேண்டும். எனினும் எந்தவொரு பெறுகைத்திட்டமும் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெறவில்லை. | கால அட்டவணைக்கு ஏற்ப பெறுகை திட்டமானது தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் மைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த நேரத்தில் தேசிய கணக்காய்வுக்கு நாங்கள் வழங்கவில்லை. எதிர்காலத்தில 2006 இல் பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் வழிகாட்டி விதிமுறைக்க இணங்க கணக்காய்வுக்கு வழங்குவதற்காக வேவையான நடவடிக்கை எடுத்திருக்கின்றது. | பெறுகை வழிகாட்டி மற்றும் தேசிய பெறுகை முகவராணைக்கு இணங்கவேண்டும். |

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2009 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு முரணாக மீளாய்வாண்டில் சபையால் பிரதி பொது முகாமையாளர் பதவிக்க ஒருவர் | அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்களை எதிர்பார்க்கப்படுகின்றது. | ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு இணங்கவேண்டும். |

பதவியுயர்த்தப்பட்டிருந்தது. மேலும் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிட்டதற்கு முரணாக உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உற்பத்தி முகாமையாளர் பதவிக்கு 02 கனிஸ்ட முகாமையாளர் தரத்தை சார்ந்தவர்கள் பதவியுயர்த்ப்பட்டிருந்தார்கள்.